Imperial Health Charity
HELPING OUR HOSPITALS DO MORE

NHS
Imperial College Healthcare
NHS Trust

வெளிநாட்டு வருகையாளர் குழு

# எங்கள் மருத்துவமனைகளில் வெளிநாட்டு வருகையாளர்களுக்கான கட்டணங்கள்

## நோயாளிகள், உறவினர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

நான் NHS மருத்துவமனையில் இலவச சிகிச்சை பெற முடியுமா?

### அறிமுகம்

நீங்கள் ஐக்கிய இராச்சியத்தில் வசிப்பவராக இல்லாவிட்டால், NHS சிகிச்சைக்கு பணம் செலுத்த வேண்டியிருக்கும். இது ஐக்கிய இராச்சியத்தின் சட்டம்.

எங்களின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அனைவரும் இலவச அவசர சிகிச்சையைப் பெறலாம்.

நீங்கள் மற்ற துறைகளில் பெறும் சிகிச்சைக்கு பணம் செலுத்த வேண்டியிருக்கலாம். ஆனால் நீங்கள் பணம் செலுத்தத் தேவையில்லை எனக் கூறும் காரணங்களும் இருக்கலாம். இது ஒரு விலக்காகும்.

நீங்கள் பணம் செலுத்த வேண்டுமா என்பதைப் புரிந்துகொள்ள நாங்கள் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்போம். சில ஆவணங்களைப் பார்க்க நாம் கேட்கலாம்.

## அவசர அல்லது உடனடிச் சிகிச்சை

உங்களுக்கு உடனடியாக தேவைப்படும் அல்லது மிகவும் தீவிரமான சிகிச்சையை வழங்க நாங்கள் ஒருபோதும் மறுப்பதில்லை. இதில் அனைத்து மகப்பேற்றுப் பராமரிப்புக்களும் அடங்கும். இதில் அவசர டயாலிசிஸ் மற்றும் இருதய சிகிச்சையும் அடங்கும். ஆனால் இந்த சிகிச்சைக்கு பின்னர் பணம் செலுத்த வேண்டி ஏற்படலாம்.

## திட்டமிட்ட சிகிச்சை (அவசரமற்றது)

உங்கள் சிகிச்சை திட்டமிடப்பட்டதாகவும்,அவசரமற்றதாகவும் இருந்தால், அந்தச் சிகிச்சைக்கு முன் நீங்கள் பணம் செலுத்த வேண்டியிருக்கும். அவசரமில்லாத பராமரிப்புக்கு உங்களுக்கு விதிவிலக்கு அல்லது காப்பீடு இல்லாவிட்டால் இது பொருந்தும்

## விதிவிலக்குகள்

உங்களுக்கு கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படலாம். உங்களிடம் EHIC இருந்தால் இது பொருந்தும். அல்லது, நீங்கள் ஐக்கிய இராச்சியம் சுகாதார ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள ஒரு நாட்டிலிருந்து வருகை தருகிறீர்கள் என்றால் இது பொருந்தும் நீங்கள் குறிப்பிட சில நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருபவராக இருந்தால் உங்களுக்கும் இது பொருந்தும். அல்லது, நீங்கள் பாதுகாக்கப்பட்ட குழுவைச் சேர்ந்தவராக இருந்தாலும் இது பொருந்தும். இது உங்களுக்குப் பொருந்துமா என்பது பற்றிய ஆலோசனையை எங்கள் வெளிநாட்டு வருகையாளர் குழுவிடமிருந்து பெறலாம்.

## ஐரோப்பிய சுகாதாரக் காப்பீட்டு அட்டை (EHIC)

உங்கள் சொந்த நாட்டில் வழங்கப்பட்ட ஒரு செல்லுபடியாகும் EHIC அட்டை உங்களிடம் இருந்தால், நீங்கள் மருத்துவமனைக்கு வரும்போது அதைக் காட்டுங்கள். உங்களிடம் EHIC இல்லையென்றால், உங்கள் சொந்த நாட்டிலிருந்து தற்காலிக மாற்றுச் சான்றிதழை (PRC) கோரவும். உங்கள் சிகிச்சைக்கான செலவை PRC ஈடு செய்யும். மேலும் தகவலுக்கு பார்க்கவும்: www.ehic.europa.eu

## இலவச மருத்துவமனைச் சிகிச்சைக்கு நீங்கள் தகுதி பெற்றுள்ளீர்கள் என்பதை எவ்வாறு நிரூபிப்பது?

நீங்கள் அடையாள அட்டையையும்  முகவரிக்கான ஆதாரத்தையும் எங்களிடம் காட்ட வேண்டும். இலவச மருத்துவப் பாதுகாப்புக்கு நீங்கள் தகுதி பெற்றுள்ளீர்களா என்பதைச் சரிபார்க்க இது எங்களுக்கு உதவும். நீங்கள் கொண்டு வரக்கூடிய ஆவணங்களின் வகைகளுக்கு கீழே பார்க்கவும்:

- கடவுச் சீட்டு (உங்களிடம் விசா இருந்தால்)
- குடியிருப்பு அனுமதி
- ஐக்கிய இராச்சிய புகைப்பட அட்டை ஓட்டுநர் உரிமம்
- தேசிய அடையாள புகைப்பட அட்டை
- பயன்பாடு அல்லது கவுன்சில் வரி பில்
- குத்தகை ஒப்பந்தம் அல்லது அடமான அறிக்கை
- வங்கி அல்லது கட்டிடச் சமூக அறிக்கை

அனைத்து பில்களும் அல்லது அறிக்கைகளும் மூன்று மாதங்களுக்கு உட்பட்டவையாக  இருக்க வேண்டும்.

நீங்கள் ஐக்கிய இராச்சியத்தில் வெளிநாட்டு மாணவராக இருந்தால், நீங்கள் படிக்கும் இடத்திலிருந்து இதை உறுதிப்படுத்தும் கடிதமும் உங்களுக்குத் தேவைப்படும்.

## நீங்கள் சிகிச்சைக்கு பணம் செலுத்த வேண்டும் என்றால்

முன்கூட்டியே செலவு குறித்த யோசனையை உங்களுக்கு வழங்க முயற்சிப்போம். ஆனால் நீங்கள் அவசர சிகிச்சையைப் பெறுகிறீர்கள் என்றால், உங்கள் சிகிச்சை முடியும் வரை எங்களால் இதைச் செய்ய முடியாது. டிஸ்சார்ஜ் செய்யும் போது உங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து சிகிச்சைகளும் எங்களுக்குத் தெரிந்தவுடன், இறுதிச் செலவை நாங்கள் தீர்மானிப்போம்.

உங்கள் சிகிச்சைக்கான கட்டணத்தை நீங்கள் காசாக, கிரெடிட் அல்லது டெபிட் கார்டு மூலம் செலுத்தலாம். நீங்கள் வங்கி பரிமாற்றம் அல்லது ஆன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

பணம் செலுத்துவது பற்றி உங்களுக்கு கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், எங்கள் கட்டணக் குழுவை தொடர்பு கொள்ளவும்: imperial.creditcontrol@nhs.net. நீங்கள் 0203 312 7158 அல்லது 07919 228034 என்ற எண்களிலும் அழைக்கலாம்.

**ஐக்கிய இராச்சியச் சட்டத்தின்படி, வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செலுத்தப்படாத கடன்களை பற்றி நாங்கள் புகாரளிக்க வேண்டும். சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறைக்கு அவற்றைப் புகாரளிக்க வேண்டும்.**

குடிவரவு தொடர்பான முடிவுகளை எடுக்க உள்துறை அலுவலகம் பணம் செலுத்தாமையைப் பயன்படுத்தலாம்.

## வேறு ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?

உங்களுக்கு கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், எங்கள் வெளிநாட்டு வருகையாளர் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: imperial.overseas.office@nhs.net

மருத்துவமனை தொடர்பு எண்கள்

| St Mary's | Western Eye | Charing Cross | Hammersmith \| QCCH |
|---|---|---|---|
| 020 3312 2173 | 020 3312 6692 | 020 3311 7715 | 020 3313 1623 |
| 07876 423521 | 07557 587757 | 07500 559103 | 07443 265959 |

## எனது வருகையைப் பற்றி நான் எப்படி கருத்து தெரிவிப்பது?

நாங்கள் சிறந்த சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம், மேலும் உங்களின் எந்தவொரு கேள்விக்கும் பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் பதிலளிப்பார்கள். உங்கள் வருகையைப் பற்றி ஏதேனும் **ஆலோசனைகள்** அல்லது **கருத்துகள்** இருந்தால், தயவுசெய்து ஊழியர் ஒருவரிடம் பேசவும் அல்லது **020 3312 7777** (10.00 - 16.00, திங்கள் முதல் வெள்ளி வரை) ஊடாக நோயாளி ஆலோசனை மற்றும் தொடர்பு சேவையை (**PALS**) தொடர்பு கொள்ளவும். நீங்கள் PALS க்கு imperial.pals@nhs.net ஊடாக மின்னஞ்சல் அனுப்பலாம். PALS குழு உங்கள் கவலைகள், பரிந்துரைகள் அல்லது வினவல்களைக் கேட்டு உங்கள் சார்பாக அடிக்கடி பிரச்சனைகளைத் தீர்க்க உதவ முடியும்.

மாற்றாக, எங்கள் புகார்கள் துறையைத் தொடர்புகொள்வதன் மூலம் நீங்கள் புகார் செய்யலாம்:

Complaints department, fourth floor, Salton House, St Mary's Hospital, Praed Street London W2 1NY

மின்னஞ்சல்: ICHC-tr.Complaints@nhs.net

தொலைபேசி: **020 3312 1337 / 1349**

மாற்று வடிவங்கள்

இந்த துண்டுப்பிரசுரத்தை பெரிய அச்சில் அல்லது எளிதாகப் படிக்கக் கூடியதாக, ஒலிப்பதிவாக, பிரெய்லியில் அல்லது மாற்று மொழிகளில் வழங்கலாம். தொடர்புக் குழுவிற்கு மின்னஞ்சல் அனுப்பவும்: imperial.communications@nhs.net

## Wi-fi

எங்கள் அறக்கட்டளையில் Wi-fi கிடைக்கிறது. மேலும் தகவலுக்கு எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: www.imperial.nhs.uk



வெளிநாட்டு வருகையாளர் குழு
வெளியிடப்பட்டது: மார்ச் 2024
மதிப்பாய்வுத் தேதி: மார்ச் 2027
குறிப்பு எண்: 936Ta
© இம்பீரியல் கல்ஹாரி ஹெல்க்கேர் NHS